# வெளியுறவுத்துறை அமைச்சரின் ஈராக் பயணம் (2013 ஜூன் 19-20)

2013, ஜூன் 16

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் அரசுமுறைப்பயணமாக பாக்தாத்திற்கு 2013 ஜூன் 19-20 தேதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். ஈராக் குடியரசின் வெளிநாட்டு அமைச்சர் மேதகு திரு ஹோஷியார் ஜிபாரி விடுத்த அழைப்பினை ஏற்று அமைச்சர் இந்த பயணத்தை மேற்கொள்கிறார்.

2003ம் ஆண்டிற்குப்பிறகு இந்தியாவில் இருந்து ஈராக்கிற்கு உயர் மட்ட அளவிலான அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளப்படுவது இது முதல் முறையாகும். வெளியுறவுத்துறை அமைச்சர் மட்டத்தில் இதற்கு முன்னதாக 1990ம் ஆண்டு அன்றைய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால், வளைகுடா போரை முன்னிட்டு இந்தியர்கள் வெளியேற்றப்படுவது தொடர்பாக விஜயம் செய்தார்.

இந்த பயணத்தின் போது வெளியுறவுத்துறை அமைச்சர், ஈராக் வெளிநாட்டு அமைச்சர் மேதகு ஹோஷியார் ஜபாரியுடன் பரஸ்பரம் ஆர்வம் உண்டாக்கும் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகள் நடத்துவார். மேலும் ஈராக் தலைமைப் பதவிகளில் இருப்பவர்களை, பிரதமர் மேதகு திரு நவுரி அல் மாலிகி மற்றும் துணைப் பிரதமர் மேதகு திரு ஹூசைன் இப்ராஹிம் சாலே அல்-ஷாஹரிஸ்தானி உள்ளிட்டவர்களை சந்திக்கிறார்.

இந்தியா மற்றும் ஈராக் காலத்தால் நிரூபிக்கப்பட்ட, இதமான மற்றும் நேசமான உறவுகளை அனுவபித்து வருகின்றன. மக்களோடு மக்கள் நெருங்கி உறவாடுதல் மற்றும் எரிசக்தி, நீர் வளங்கள், கல்வி, சுகாதாரம், திட்ட ஏற்றுமதிகள் போன்ற துறைகளில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு போன்றவற்றால் இந்த உறவுகள் பிணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு கச்சா எண்ணை வழங்கும் செய்யும் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக ஈராக் தற்போது உருவெடுத்துள்ளது. ஈராக்கில் போருக்கு பிந்தைய மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சி முயற்சிகளில் ஆதரவு அளிக்க இந்தியா உறுதி பூண்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்த பயணம், இரு தரப்பு உறவுகளுக்கு உந்துதலை வழங்கி உறவினை உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது உறவுகளை மேம்படுத்தி இரு நாட்டு மக்களுக்கும் பரஸ்பரம் பலனை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**புது தில்லி**
**2013, ஜூன் 16**